**ஆட்கள், ஆதனங்கள் மற்றும் கைத்தொழில்களின் புனரமைப்பு அதிகாரசபை**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1. அபிப்பிராயம்

எனது பரிசீலனைகளிலிருந்து தென்படுவதும் எனக்களிக்கப்பட்ட அதி உயர் தகவல்கள், விளக்கங்கள் என்பவற்றிற்கமையவும் ஆட்கள், ஆதனங்கள் மற்றும் கைத்தொழில்களின் புனரமைப்பு அதிகாரசபை 2010 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்தது என்றும் இவ்வறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் சுட்டிக்காட்டப்பட்டவாறான விடயங்களின் மூலம் நிதிக்கூற்றுக்களில் ஏற்படும் தாக்கங்களைத் தவிர, 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஆட்கள், ஆதனங்கள் மற்றும் கைத்தொழில்களின் புனரமைப்பு அதிகாரசபையின் நிலைவரம், அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் செயற்பாடுகளின் நிதிசார் விளைவுகள் மற்றும் காசுப் பாய்ச்சல் என்பவற்றை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தோற்றும் விதத்தில் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கேற்ப நிதிக்கூற்றுக்கள் தயாரித்துச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 இலங்கை கணக்கீட்டு நியமம்

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

(அ) இலங்கை கணக்கீட்டு நியமம் 3

1983 யூலை கலவரத்தின் காரணமாக இடம்பெயர்ந்த மக்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 10,000 படியான சுயதொழில் கடன் மீதிகளில் ரூபா 8,642,952 தொகையினையும், ரூபா 25,000 படியான ஆதனங்களும் நாளதுவரையாக்கும் கடனாகிய ரூபா 67,341,609 தொகையினையும் கணக்குகளில் இருந்து பதிவழிக்கப்படுவதற்கு ஆரம்ப நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்த போதிலும் இலங்கை கணக்கீட்டு நியமம் 3 இன்

பிரகாரம் கணக்கீட்டுப் பதிவுகளின் மூலம் வெளிக்காட்டப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கை கணக்கீட்டு நியமம் 18

-------------------------------------------------------

ஐந்தொகையில் ரூபா 6,552,490 தொகையான முற்றாக பெறுமானத்தேய்விடப்பட்ட நிலையான சொத்துக்கள் காண்பிக்கப்பட்டிருந்ததுடன் அந் நிலையான சொத்துக்கள் என்ன என்பது தொடர்பாக பௌதீக ரீதியாக இனங்காணப்பட்டிருக்கவில்லை. கணக்கீட்டு நியமத்திற்கு இணங்க முற்றாக பெறுமானத்தேய்விடப்பட்டு எனினும், பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படக்கூடிய சொத்துக்கள் மீள்பெறுமதியிடப்பட வேண்டிய போதிலும் இச் சொத்துக்கள் தொடர்பாக மேற்குறித்த வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) இலங்கை கணக்கீட்டு நியமம் 24

-------------------------------------------------------

சொத்துக்களுக்குரிய அரசாங்க மானியங்கள் கணக்கிடப்படுவது தொடர்பாக கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) இலங்கை கணக்கீட்டு நியமம் 36

-------------------------------------------------------

2008 ஒக்டோபர் 06 ஆம் திகதி சேவையை விட்டுச் சென்ற உத்தியோகத்தர்களுக்கு உரித்தான ரூபா 87,725 தொகையான பணிக்கொடைக் கொடுப்பனவு தொழில் திணைக்களத்தின் கணக்கில் 2009 யூலை 25 ஆம் திகதி வைப்பிலிடப்பட்டிருந்ததுடன் இவை நிகழத்தக்க பொறுப்புகளாக ஐந்தொகையில் வெளிக்காட்டப்பட்டிருக்கவில்லை.

### 1.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

-------------------------------------------

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வாகனங்களின் பெறுமதி ரூபா 6,668,570 ஆனமையால் அதிகாரசபையின் வருடாந்தப் பெறுமானத்தேய்வு வீதத்தின் பிரகாரம் பெறுமானத்தேய்வு மீதி ரூபா 1,667,142 ஆக இருக்க வேண்டிய போதிலும் ரூபா 1,677,142 ஆக பெறுமானத்தேய்வு கணக்கிடப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டின் செலவினம் ரூபா 10,000 தொகையால் கூடுதலாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) ரூபா 293,000 கிரயமான சொத்துக்கள் அகற்றப்பட்டிருந்ததுடன் அவற்றின் புத்தகப் பெறுமதி ரூபா 8,689 ஆகக் காணப்பட்டது. அவை முற்றாக பெறுமானத்தேய்விடப்பட்டவையாகக் கருதப்பட்டு கணக்குகளில் சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தமையால் சொத்துக்கள் அகற்றப்படுவதிலான இலாபம் ரூபா 8,689 தொகையால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

-------------------------------------------------------------------------------------------

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றிற்கான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) கப்பல், துறைமுகங்கள், புனர்வாழ்வு மற்றும் புனரமைப்பு அமைச்சு செயலாளரின் 1994 திசெம்பர் 5 ஆம் திகதிய எம் ஆர் ஆர்/ 7/1/48/94 | திருமணமானதை அடுத்து வாழ்க்கையை ஆரம்பிப்பதற்கு ரூபா 25,000 தொகையான உதவியை வழங்கப்படக்கூடிய போதிலும் இடம்பெயர்ந்த இருவருக்கு சுற்றறிக்கைக்கு மாறாக உதவித் தொகையில் ஒரு பகுதி மாத்திரமே செலுத்தப்பட்டிருந்தது. |

| | | |
|---|---|---|
| | ஆம் இலக்க சுற்றுநிருபம் | திருமண ஊக்குவிப்புப் படிப்பணம் செலுத்தப்படுகையில் அதன் குறித்த நலனைப் பெறுவதற்காக திருமணமான காலப்பகுதியின் போது பெறப்பட வேண்டிய போதிலும் திருமணமாகி 10 முதல் 15 ஆண்டு காலம் கடந்திருந்த பின்னரும் மீளாய்வாண்டின் போது நலன்கள் வழங்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. |
| (ஆ) | 2003 யூலை 24 ஆம் திகதிய 112 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கை | முறையான அங்கீகாரம் இன்றி ஒருங்கிணைப்பு உத்தியோகத்தருக்கு வாடகை வாகனம் பயன்படுத்தப்படுவதற்காக ரூபா 156,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது. |
| (இ) | 2007 மே 11 ஆம் திகதிய 09/2007 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றறிக்கை | அரச சேவையில் இருந்து ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்கள் அரச கூட்டத்தாபனங்களில் கடமையாற்றுகையில் வாழ்க்கைச் செலவுப்படி செலுத்தப்படலாகாத போதிலும் 2010 யூலை முதல் திசெம்பர் வரை சேவையில் ஈடுபட்ட ஓய்வுபெற்ற உத்தியோகத்தருக்கு வாழ்க்கைப்படிப்பணமாக ரூபா 15,750 தொகை செலுத்தப்பட்டிருந்தது. |
| (ஈ) | 2008 சனவரி 01 ஆம் திகதிய 1530/3 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் | ரூபா 25,000 இற்கு மேற்பட்ட பணம் அல்லது வேறு ஏதேனும் ஆதனத்திற்காக வழங்கப்படும் பற்றுச்சீட்டிற்காக முத்திரைக் கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | இலங்கை தாபன விதிக்கோவை<br>---------------------------------------------- | |
| | (அ) V ஆம் அத்தியாயத்தின் 2.5.3 ஆம் பிரிவு | இரண்டாம் நிலை அடிப்படையில் கடமையாற்றும் உத்தியோகத்தரின் |

| | | |
|---|---|---|
| | | சம்பளத்தில் 25% அறவிடப்பட்டு ஓய்வூதிய பணிப்பாளர் நாயகத்திற்குச் செலுத்தப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு அனுப்பிவைக்கப்படாது மொத்தச் சம்பளத்தொகையும் உத்தியோகத்தருக்குச் செலுத்தப்பட்டிருந்தது. |
| (ii) | VII ஆம் அத்தியாயத்தின் 10.1, 10.2 ஆம் பிரிவுகள் | பதவிநிலை உத்தியோகத்தர் ஒருவர் வார இறுதி நாட்களிலோ அல்லது அரசாங்க விடுமுறை நாட்களிலோ சேவையில் ஈடுபடுத்தப்பட முன்னர் முன்னங்கீகாரம் பெறப்பட்டிருக்க வேண்டிய போதிலும் அத்தகைய முறையான அங்கீகாரம் இன்றி 16 சந்தர்ப்பங்களின் போது விடுமுறை தினக் கொடுப்பனவிற்காக ரூபா 35,004 தொகை செலவிடப்பட்டிருந்தது. |
| (iii) | XIV ஆம் அத்தியாயத்தின் 1.3 ஆம் பிரிவு | வெளிக்கள கடமைகளில் ஈடுபடுகையில் அதற்கான தங்குமிட, உணவிற்காக பணம் பெற்றுக்கொள்ளப் பட்டிருந்ததுடன் அப் பயணத்திற்காக இணைந்த படிகளும் பெற்றுக்கொள்ளப் பட்டிருந்தன. தெரிவுக்கணக்காய்வின் படி, உணவிற்காக ரூபா 290,744 தொகையும் இணைந்த படிப்பணமாக ரூபா 44,662 தொகையும் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. |
| (iv) | XXIV ஆம் அத்தியாயத்தின் 4.8 ஆம் பிரிவு | 2010 செப்தெம்பர் 30 ஆம் திகதி மற்றும் 2010 பெப்ரவரி 01 ஆம் திகதிகளில் சேவையில் இருந்து விலகிய இரண்டு உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட |

வேண்டிய ரூபா 736,393 தொகையான ஆதன கடன் மீதி அறவிடப்படாது 2010 செப்தெம்பர் 30 ஆம் திகதியும் 2010 பெப்ரவரி 02 ஆம் திகதியும் அதிகாரசபையினால் அவ் உத்தியோகத் தருக்கு ஊழியர் பணிக்கொடையாக ரூபா 189,545 செலுத்தப்பட்டிருந்தது. அரசாங்கத்தினால் அறவிடப்பட வேண்டியிருந்த பணம் அறவிடப்படாது பணிக்கொடை விடுவிக்கப்பட்டிருந்த உத்தியோகத்தர்கள் தொடர்பில் எவ்வித நடவடிக்கைகளும் அதிகாரசபையினால் எடுக்கப்பட்டிருக்க வில்லை.

(ஊ) 1997 சனவரி 15 ஆம் திகதிய 2/97 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை மற்றும் தாபன விதிக்கோவையின் VII ஆம் அத்தியாயத்தின் 6 ஆம் பிரிவு

நிறுவகத்தினால் நிதிப்பிரமாணம் அல்லது மேலதிகநேர வேலை கட்டுப்பாட்டுப் பிரமாணம் அங்கீகரிக்கப்பட்டிராத போதும் பொது நிர்வாகச் சுற்றறிக்கைக்கு மாறாக 1 ½ மணித்தியால மேலதிக நேரப்படிப்பணம் செலுத்தப் பட்டிருந்தது.

(எ) இலங்கை அரசாங்கத்தின் நிதிப் பிரமாணம்

-------------------------------------------

நி.பி. 756(2)(அ)

மெய்மையாய்வுச் சபையின் சேர்மானமாக பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்கள் இருவர் நியமிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்படாது கொள்வனவிற்குப் பொறுப்பான உத்தியோகத்தர்களே பொருள் மெய்மையாய்வு நடவடிக்கைகளிலும் பங்குபற்றியிருந்தனர். பொருள் மெய்மையாய்வு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்த

நிறுவகத்தின் 4 உத்தியோகத்தர்களுக்கு முறையான அங்கீகாரம் இன்றி ரூபா 12,000 தொகையும் செலுத்தப்பட்டிருந்தது.

## 2. நிதிசார் மற்றும் தெழரிற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் மீளாய்வு

#### 2.1.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி, மீளாய்வாண்டில் அதிகாரசபையின் தொழிற்பாடுகளின் நிதிசார் விளைவுகள் ரூபா 2,137,985 மிகையாக இருந்ததுடன் முன்னைய ஆண்டின் நோரொத்த மிகை ரூபா 12,389,558 ஆனமையால் நிதிசார் விளைவுகளில் ரூபா 10,251,573 தொகையான வீழ்ச்சியைக் காணக்கூடியதாக இருந்தது. வருமானம் ரூபா 45,467,575 தொகையால் குறைவடைந்திருந்தமையும் ஆளணி ஊதியங்கள் ரூபா 2,134,820 தொகையாலும் இழப்பீட்டுக் கொடுப்பனவுகளும் நலன்புரி நடவடிக்கைகளும் ரூபா 32,852,099 தொகையினாலும் ஆக செலவினம் குறைவடைந்திருந்தமை நிதிசார் விளைவுகளில் வீழ்ச்சிக்குப் பிரதானமாக தாக்கமளித்திருந்ததாக அவதானிக்கப்பட்டது.

#### 2.1.2 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கைக்கு மாறாக ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர் பதவிக்காக 2010 ஆம் ஆண்டின் போது 11 பேர் சேவையில் ஈடுபடுத்தப்பட்டு இதற்காக ரூபா 773,916 தொகை சம்பளமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

### 2.2 செயற்பாட்டு மீளாய்வு

#### 2.2.1 செயலாற்றுகை

மீளாய்வாண்டின் போது அதிகாரசபையினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் செயலாற்றுகை பின்வருமாறாகும்.

| | நிகழ்ச்சித்திட்டம் | மதிப்பிடப்பட்ட தொகை | உள்ளபடியான தொகை | முரண் | மதிப்பிடப்பட்ட சந்தர்ப்பம் | உள்ளபடியான சந்தர்ப்பம் | முரண் |
|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | | | |
| 1. | பொது மக்களின் உயிரிழப்பு மற்றும் காயங்களுக்காக இழப்பீடு வழங்குதல் | 208,754,400 | 48,964,500 | 159,789,900 | 2,758 | 638 | 2,120 |
| 2. | அரச அல்லது அரச கூட்டுத்தாபன ஊழியர்களின் உயிரிழப்பு மற்றும் காயங்களுக்காக இழப்பீடு வழங்குதல் | 11,535,750 | 2,345,000 | 9,190,750 | 116 | 19 | 97 |
| 3. | அரச ஊழியர் ஆதன இழப்பீடு செலுத்துதல் | 40,595,000 | 39,155,411 | 1,439,589 | 341 | 398 | (57) |
| 4. | சேதமுற்ற சமயத்தலங்களுக்காக இழப்பீடு செலுத்துதல் | 10,900,000 | 665,740 | 10,234,260 | 41 | 09 | 32 |
| 5. | பொது மக்களின் சொத்துக்களுக்கான இழப்பீடு செலுத்துதல் | 27,190,000 | 25,126,893 | 2,063,107 | 322 | 332 | (10) |
| 6. | இடம் பெயர்ந்த மக்களுக்காக திருமணம் சமுர்தி வீடமைப்பு உதவிக் கொடுப்பனவு | 39,750,000 | 6,675,000 | 33,075,000 | 1,590 | 524 | 1,066 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 7. | விசேட வகையிலான நபர்களுக்காக சொத்து இழப்பீடு வழங்குதல் | 2,850,000 | 597,500 | 2,252,500 | 19 | 06 | 13 |
| 8. | ஒருங்கிணைந்த நிவாரண திட்டத்தின் கீழ் வீடமைப்பு உதவிக் கொடுப்பனவு | 126,450,000 | 85,000,000 | 41,450,000 | 1,404 | 2,087 | (683) |
| 9. | தேர்தல் வன்செயல்களினால் உயிரிழந்த மற்றும் காயமடைந்தவர்களுக்கான இழப்பீடு வழங்குதல் | 10,617,250 | - | 10,617,250 | 354 | - | 354 |
| 10. | தேர்தல் வன்செயல்களினால் சேதம் விளைவிக்கப்பட்ட சொத்துக்களுக்கான இழப்பீடு வழங்குதல் | 100,000,000 | - | 100,000,000 | 2,208 | - | 2,208 |
| 11. | கூட்டு நிவாரண திட்டத்தின் கீழ் வாழ்க்கைப் படிக் கொடுப்பனவு | 41,250,000 | - | 41,250,000 | 1,250 | - | 1,250 |

### 2.2.2 செயற்பாட்டுத் திறமையீனங்கள்

அதிகாரசபையினால் 1990 ஆம் ஆண்டு முதல் 1995 ஆம் ஆண்டு வரை தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபைக்கு ஒருங்கிணைந்த நிவாரண திட்டத்தின் கீழ் கடன் வசதிகளை வழங்கும் வகையில் ஏற்பட்ட ரூபா 128,000,000 தொகையான முதலீட்டிற்காக 3 ஆண்டுகளுக்கான ரூபா 30,720,000 தொகையான வட்டி அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 பாதீட்டுக்கட்டுப்பாடு

-------------------------------

மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானங்களுக்கும் செலவினத்திற்கும் இடையே கருத்திற்கொள்ளப்பட வேண்டிய முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடானது ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

## 3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

-----------------------------------------------------

பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) நிலையான சொத்துக்கள்
(ஆ) ஒருங்கிணைந்த நிவாரணகடன் திட்டம்
(இ) இழப்பீட்டுக் கொடுப்பனவுகள்
(ஈ) வீடமைப்பு உதவிச் செயற்திட்டம்